**OS No.64/2021**
DW 1 - சிவாஜி

நாள் 02.02.2026

**பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் சொன்னேன். இவ்வழக்கில் 2 ம் பிரதிவாதியாக உள்ள சிவக்குமார் என் மகன் ஆவார். நிரூபண வாக்குமூலத்தில் காந்திசேர்வைக்கு முதல்தாரம், இரண்டாம் தாரம் மற்றும் பிள்ளைகள் உள்ள விபரத்தை தெரிவித்து இருப்பதற்கு வம்சாவழி ஜாபிதா தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை.

நிரூபண வாக்குமூலத்தில் காந்திசேர்வையின் முதல் தாராம் மீனாம்பாள் என்று சொல்லியுள்ளேன். மீனாம்பாள் ஆதியில் கிரயம் பெற்றதாக சொல்லியுள்ள பதிவு ஆவண எண் 1987/1958 என்ற ஆவணத்தின் அசல் தொலைந்துவிட்டது. அதன் சார்பதிவாளர் நகலை வீட்டில் வைத்துள்ளேன்.

மேற்படி அசல் ஆவணம் எத்தனை வருடங்களுக்கு முன்பு காணாமல் போனது என்றால் 40 வருடங்கள் இருக்கும். அப்போது என் தாயார் மீனாம்பாள் உயிருடன் இல்லை. மேற்படி ஆவணம் தொலைந்து போனது சம்பந்தமாக புகார் கொடுத்தீர்களா என்றால் எனக்கு அது தெரியாது.

காந்திசேர்வை – மீனாம்பாளுக்கு பிறந்த மூத்த பெண் காமாட்சி தான் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். நீங்களும், தனசேகரனும் அடுத்தடுத்த ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். நீங்களும், தனசேகரனும் மற்றும் இளையதாரத்து பிள்ளைகளும் தகப்பனாரும் சேர்ந்து எந்த வருடம் பாகம் பிரித்து கொண்டீர்கள் என்றால் 1987 ல் பிரித்துக்கொண்டோம்.

பதிவு ஆவணம் 1484/1987 ஆக பதிவு பாக பிரிவினை

பத்திரம் 10.11.1987 ம் தேதி மூன்று பார்டிகளாக இருந்து பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். மூன்று பார்டிகளாக இருந்ததில் உங்கள் தகப்பனார் காந்திசேர்வை 1 வது பார்டியாகவும், சிவாஜி, தனசேகரன் ஆகியோர் 2 வது பார்டியாகவும், இரண்டாவது தாராம் லீலாவதியும் அவரது ஆண் மக்களும் 3 வது பார்டியாகவும் இருந்து எழுதி பதிவு செய்யப்பட்டது தான் மேற்படி பாகப்பிரிவினை பதிவு ஆவணமாகும் என்றால் சரிதான்.

மேற்படி பதிவு பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா சொத்து சேரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி காமாட்சி மேற்படி பதிவு பாக ஆவணத்தில் ஒரு பார்டியாக இருக்கவில்லை. வாதி காமாட்சிக்கு 1976 திருப்பாச்சேத்தியை சேர்ந்த சுப்பிரமணியனுக்கு திருமணம் செய்து முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

அந்த சமயத்தில் என் தாயார் உயிருடன் இருந்தார் என்றால் சரியல்ல. அந்த கல்யாணத்திற்கு சீராகத்தான் தாவா சொத்தை உங்கள் தகப்பனாரும், தாயாரும் சேர்ந்து கொடுத்தார்கள் என்றால் கொடுக்கவில்லை. அந்த தாவா சொத்து பெண் வழி சொத்து என்பதால் உங்கள் தாயார் உங்கள் சகோதரியான இந்த வாதிக்கு கொடுத்தார்கள் என்றால் கிடையாது. என் அப்பா வாங்கிய சொத்து.

என் அப்பா தாவா சொத்தை வாங்கியதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. உங்கள் தகப்பனார் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்தை வாதிக்கு சீதனமாக கொடுத்தால் தான் 1987 ல் ஏற்பட்ட பதிவு பாகவிஸ்தியில் தாவா சொத்து சேர்க்கப்படவில்லை, வாதியும் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல.

1987 ல் ஏற்பட்ட பதிவு பாகவிஸ்தி ஆவணத்தின் நகல் என்னிடம் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பதிவு பாகவிஸ்தி ஆவணம் உள்ளதை மறைத்து நிரூபண வாக்குமூலத்தில் 4 வது பாராவில் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டுள்ளது என்று பொய்யாக

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் வழக்கறிஞரிடம் பதிவு ஆவணம் என்று சொன்னேன் வாய்மொழி பாக ஆவணம் என்று சொல்லவில்லை. தனசேகரனும் நானும் நேசமாக இல்லை. தாவா சொத்தை வாதி தங்கம் என்பவருக்கு ரூபாய்.10000/- க்கு ஒத்திக்கு வைத்தார் என்றால் சரியல்ல.

உங்கள் ஊரை சேர்ந்த சோனைமுத்து மகன் பிச்சைமணிக்கு தாவா சொத்தை காமாட்சி 24.03.1986 ல் ரூபாய் 3000/- க்கு ஒத்தி வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் கையெழுத்தை ஆங்கிலத்தில் போடுவேனா தமிழில் போடுவேனா என்றால் தமிழில் தான் போடுவேன்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 14 ஆவணத்தில் 1 வது சாட்சியாக கையொப்பம் செய்தது நான் தான் அந்த கையொப்பம் **வா.சா.ஆ 15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் 2 வது சாட்சியாக என் தம்பி தனசேகரன் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

தாவா வழக்கு சொத்தின் பெயர் பொட்டச்செய் என்றால் சரிதான். அது 50 செண்ட் விஸ்தீரணம் உள்ளது என்றால் சரிதான். செல்லத்துரைக்கு வைத்த ஒத்தியை வாதி தான் ஒத்திப்பணம் கட்டி திருப்பி வைத்துள்ளார். அந்த ஆவணத்திலும் நானும், என் தகப்பனாரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம்.

வாதி காமாட்சியின் கணவர் சுப்பிரமணியன் 45 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு இந்த நீதிமன்றத்தில் கேவியட் தாக்கல் செய்யப்பட்டு உங்களுக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி காமாட்சி படிக்கவில்லை என்றால் 8 ம் வகுப்புவரை படித்துள்ளார். நான் படிக்கவில்லை.

நான் டீ கடை வைத்து நடத்திவருகிறேன். தனசேகரன்

ஹோட்டல் வைத்து நடத்திவருகிறார். இரண்டு கடைகளும் பக்கத்து பக்கத்தில் உள்ளது. இரண்டு கடைகளும் 1987 பதிவு பாகவிஸ்தியில் கண்டுள்ள சொத்து என்றால் சரிதான். இந்த சொத்து போக வீடு, நிலங்கள், எனக்கும் தனசேகரனுக்கும் பிரிக்கப்பட்டிருப்பது எங்கள் பெயருக்கு பட்டா ஏற்படவில்லை. எங்கள் தகப்பனார் பெயரில் பட்டா உள்ளது. தகப்பனார் பெயரில் பட்டா இருந்தாலும் மேற்படி பாகத்தில் கிடைத்த சொத்துக்களை நான் தனியாகவும், தனசேகரன் தனியாகவும் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

என் டீ கடைக்கும் தனசேகரன் ஹோட்டலும் ஒன்றாக இருந்ததை பாக விஸ்திக்கு பின்பு நடுவில் சுவர் எழுப்பி தனித்தனியாக நாங்கள் இருவரும் அனுபவம் செய்து வருகிறோம். தாவா சொத்து தாயாருக்கு பாத்தியப்பட்டதை வாதிக்கு கல்யாணத்தில் சீதனமாக கொடுக்கப்பட்டாலும், பட்டா மாறாமல் தகப்பனார் பெயரில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

நீங்கள் 1987 பாகவிஸ்தியில் தாவா சொத்தை ஏன் சேர்க்கவில்லை என்பதை என்ற விபரத்தை எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.போலிசில் புகார் கொடுத்தற்காக பி.வா.சா.ஆ 2 ஐ தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ 2 க்கான புகார் மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

பி.வா.சா.ஆ 2 ல் வாதி காமாட்சி, அவரின் மகன் மற்றும் என் தம்பி தனசேகரனை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ல் தனசேகரனை ஏன் சேர்த்தீர்கள் என்றால் வாதிக்கு தனசேகரன் ஆதரவாக இருப்பதால் அவரை நான் இந்த புகாரில் சேர்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 ற்கான ஆவணத்தில் ராம.சசி என்ற கிராமநிர்வாக அலுவலர் கையொப்பம் செய்துள்ளார். இது எனக்கு போன வருடம் வழங்கப்பட்ட ஆவணம் ஆகும்.

வாதி காமாட்சி தாவா சொத்தை விவசாயம் செய்து வருவதாக

எனக்கு சான்ற கொடுத்த ராம.சசி என்ற வி.ஏ.ஓ தான் 04.12.2025 ம் தேதி சான்று வழங்கியுள்ளார் என்றால் பாதி சொத்திற்கு வழங்கியுள்ளார். அந்த ஆவணம் **வா.சா.ஆ 16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ 16 ஆவணம் பாதி சொத்திற்கு உரியது அல்ல முழு சொத்திற்கு உரியது என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ 1 ஐ கொடுத்த அதே வி.ஏ.ஓ தான் 06.12.2025 ம் தேதி வாதிக்கு நில வரி ரசீது கொடுத்துள்ளார் அது என் தகப்பனார் பெயரில் உள்ளது. அந்த ஆவணம் வா.சா.ஆ 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பி.வா.சா.ஆ 1 ஆவணத்திற்கு முந்தைய, பிந்தைய அடங்கல் ஆவணம் உள்ளதா என்றால் என்னிடம் உள்ளது. ஆனால் அந்த அடங்கல் ஆவணங்களைநான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண் 125/8 நிலத்தை காமாட்சிக்கு என் தகப்பனார் விட்டுக்கொடுத்ததை எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அந்த மாதிரி சர்வே எண் 125/8 சொத்து வாதிக்கு கொடுக்கப்படவில்லை, தாவா சொத்து தான் கொடுக்கப்பட்டது நீங்கள் தாவா வழக்கு எதிர்வாதத்திற்காக சர்வே எண் 125/8 கொடுக்கப்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நிரூபண வாக்குமூலத்தில் 7 வது பத்தி முடிவில் புல எண் 99/1 சி என்ற நிலத்தை வாதியிடம் நான் அடமானம் வைத்தாக சொல்லியிருப்பதற்கு ஆவணம் என்னிடம் உள்ளது அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்று எனக்கு ஞாபகமில்லை.

தாவா சொத்தை வாதி சீதனபாத்தியப்படி 1976 ல் இருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நீங்கள் அனுபவம் செய்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ

1 ஆவணம் வி.ஏ.ஓ – வை ஏமாற்றி பெற்றது என்று வி.ஏ.ஓ தெரிவிக்கிறார் என்றால் சரியல்ல. நீங்கள் வி,ஏ.ஓ – வை இந்த ஆவணத்தை கொடுத்தது நீங்கள் தானா என்று விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால் ஆமாம். வாதியை அனுபவம் செய்யவிடாமல் தடுப்பதற்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

வாதிக்கு சீதனபாத்தியம் என்பதை ஒப்புக்கொண்டு தான் வா.சா.ஆ 14 ன் படி வாதி வைத்த ஒத்தியை ஏற்றுக்கொண்டு தான் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.